# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No.252/2023 |
| Prosecution Witness | : | அ.சா.6 |
| Name | : | தங்கராஜ் |
| Father's / Husband Name | : | மொசக்குட்டி |
| Address | : | செங்குணம் |
| Age | : | 65/2025 |

**தேதி : 17.02.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் பத்திர எழுத்தராக பணி செய்துவருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. கடந்த 2011ம் தேதி வெள்ளைச்சாமி என்ற வழக்கறிஞர் பவர் பத்திரத்தை வைத்து பிளாட்டை எழுதவேண்டும்என்று சொன்னார். அந்த பத்திரத்தை நான் எழுதிக்கொடுத்தேன். பச்சமுத்து என்பவர் பெயரில் பவர் பத்திரம் இருந்தது. ராஜேந்திரன் என்பவர் பெயரில் எழுதிக்கொடுக்க சொன்னார்கள், எழுதிக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அதை என்னுடைய அலுவலகத்தில் வைத்து ் போட்டேன். எதற்காக போட்டேன் என்று ஞாபகமில்லை. பத்திரம் எழுதிக்கொடுதது நானா என்று விசாரணை செய்து போலீஸார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். **இரண்டாவது கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1முதல் 4 மற்றும் 6வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னை போலீஸார் விசாரிக்கவில்லை. நான் கிரய பத்திரம் எதுவும் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. போலீஸார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து போட்டுக்கொடுத்தேன் என்றால் சரிதான். **மேற்படி குறுக்கு விசாரணை 5வது எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.**

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.